சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்.

மலர் 4. | காலயுத்திஞு மார்கழிமீ - 1918ஞு டிசம்பர்மீ | இதழ் 12

### திருஞான சம்பந்தமூர்த்திநாயனர் துதி.*

மணிவாயாற் றிருமிடற்றன் மலர்க்கரத்தாற் றமிழ்மூன்று
மணியாக்கிப் புனனடு மருந்தமிழ்நா டெனத்தோன்றுந்
தணியாத திருஞான சம்பந்தர் பதம்பணியும்
பணிவார்தம் பதம்பணியும் பணியெமக்குப் பணியாமே.

(இ-ள்.) மணிவாயால் = அழகிய வாயினலும், திருமிடற்றல் = திருக்கண்டத்தினலும், மலர்கரத்தால் = செந்தாமரை மலர்போன்ற திருக்கரத்தினலும், மூன்று தமிழும் அணி ஆக்கி = முத்தமிழையும் அழகுபெறச்செய்து, புனன்நாடும் அரு தமிழ் நாடு என = சோழநாடுஞ் செந்தமிழ்நாடு என்று புகழ, தோன்றும் = (சீகாழிப் பதியிற்) றிருவவதாரஞ்செய்த, தணியாத திருஞான சம்பந்தர் பதம் பணியும் = மாருத திருஞானசம்பந்தப் பிள்ளையாரது திருவடிகளை வணங்குகின்ற, பணிவார்தம் = திருத்தொண்டுடையாரது, பதம் பணியும் பணி = பாதங்களை வழிபடுகின்ற தொழிலே, எமக்கு பணி ஆம் = எமக்குத் தொழிலாகும்.

முத்தமிழாவன—இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ்.

இயற்றமிழ்நூல்களாவன.—அகத்தியம், இறையனரகப்பொருள், அகநானூறு, புறநானூறு, புறப்பொருள் வெண்பாமாலை, புறப்பொருட் பன்னிருபடலம், தொல்காப்பியம், யாப்பருங்கலம், தண்டியலங்காரம், மாறனலங்காரம், இலக்கணவிளக்கம், பரிபாடல், பத்துப்பாட்டு, பாசண்டம், முத்தொள்ளாயிரம், பதிற்றுப்

(* இது பட்டினத்துப் பிள்ளையார் புராணச்செய்யுள். இவ்வுரை வித்வான் நா. கதிரைவேற்பிள்ளையவர்கள் இயற்றியது.

பத்து, பதினெண் கீழ்க்கணக்கு, கலித்தொகை, பெருங்கலித் தொகை, முதலியனவும், பெருங்காப்பிய சிறுகாப்பிய பிரபந்த வகைகளுமாம்.

இசைத்தமிழ் நூல்களாவன.—பஞ்சபாரதீயம், பஞ்சமரபு, பெருங்குருகு (முதுகுருகு), பெருநாரை, குருகு, வெண்டாளி, களரியாவிரை, இந்திரகாளியம், இசைநுணுக்கம் முதலியனவாம்.

நாடகத்தமிழ் நூல்களாவன.—பரதசேனாபதீயம், சுத்தானந்தப் பிரகாசபரதம், பரதம், மதிவாணர் நாடகத்தமிழ், முறுவல், செயிற்றியம், தாளவகையோத்து, சயந்தம், கூத்தநூல், குணநூல் முதலியன.

மணிவாயால் இயற்றமிழையும், திருமிடற்றினால் இசைத்தமிழையும், மலர்க்கரத்தால் நாடகத்தமிழையும் அணியாக்கினார் என முறையே கொள்க. இது நிரனிறைப்பொருள்கோள். நெஞ்சு முதலிய பெருந்தான மெட்டானும், எடுத்தலாதிய கிரியைகளெட்டானும் பிறந்து பண்ணப்படும் பண்ணும் இசையுமாகிய இவற்றைப் பயப்பது மிடறு ஆகலான் "திருமிடற்றால்" என்றும், தாம் திருவாய்மலர்ந்தருளும் திவ்வியவிசைப் பாடல்களுக்குக் கொட்டு அசை, தூக்கு, அளவு என்னு மிவையிற்றின்றொழில் பொருந்தப் புணர்க்குந் தாளவகைகளைக் கையாற் செய்தருளினர் என்பார் "கரமலரான்" என்றுங் கூறினார். இத்தாளங்களின் வழிவருவன செந்தூக்கு, மதலைத்தூக்கு, துணிபுத்தூக்கு, கோயிற்றூக்கு, நிவப்புத்தூக்கு, கழாற்றூக்கு, நெடுந்தூக்கு ஆகலின் நாடகவுறுப்பாய் நின்றன. கொடுந்தமிழ் நாட்டினு ளொன்று வைத்தெண்ணப்பட்ட சோழநாடு, செந்தமிழ் நாடாகும்படி முத்தமிழையும் வளர்த்தாரென்றபடி. அதனை முத்தமிழ் விரகர் என்னுந் திருநாமத்தானு மறிக. சோழநாடு செந்தமிழ் நாடாயதைப் பெரியபுராணத்தும், யாப்பருங் கலக்காரிகைக்கணும், சேனாவரையத்துங் கண்டுணர்க. திருஞானசம்பந்த நாயனாரது திருவடிகளைப் பணியும் பணியே பணியென்றது, அவரடியார் அடிகளைப் பணிபணியே பணியென்றது அவரது பெருந்தலைமை யுணர்த்தற்காம். சம்பந்தர்-உபர்வு பற்றியபால் வழுவமைதி. மற்றவற்றிற்கும் இங்ஙன முரைக்க.

# சிவஞானபோதம்.

## ஆறாஞ் சூத்திரம்—இரண்டாமதிகரணம்.

(243-வது பக்கத்தொடர்ச்சி.)

### உதாரண வெண்பா.

பாவகமேற் றானசத்தாம் பாவநா தீதமெனிற்
பாவகமா மன்றேன்னிற் பாழதுவாம்—பாவகத்தைப்
பாவித்த றானேன்னிற் பாவகமாந் தன்னருளாற்
பாவிப் பதுபரமில் பாழ்.

(இ-ள்.) பாவகமேல் தான் அசத்து ஆம்=(நீ கூறும் பாவனை ஏனைப்பாவகங்கள்போல மனமுதலியவற்றோடுகூடி நின்று பாவிக்கும்) பாவகமெனில், (அறிவினாலறியப்பட்ட சுட்டாதலால் அப்பொருள்) அசத்தேயாம்.—பாவநாதீத மெனின் பாவகம் ஆம்=பாவனையைக்கடந்தது (அஃதாவது, கருவிகளோடு கூடாது நின்று பாவிப்பது) எனில், (கருவிகள் நீங்கியபோது ஒன்றையும் அறிதலில்லாத கேவலாவத்தைபரமாதலினால் அது) பாவகமாத்திரையேயன்றி பயன்படுமாறில்லை—அன்று என்னின் அது பாழ் ஆம்=இவ்விருதிறனுமன்றி அநிருவசனமாக(அஃதாவது சொல்லொணாததாக) பாவிக்கப்படுவதெனின் அது சூனியப்பொருளாம்—பாவகத்தைப் பாவித்தல் என்னின் பாவகம் ஆம்=(இம்மூவகையுமின்றிப் பசித்தவன் உண்டவனாகப் பாவிக்குமாறுபோல உணராத பொருளை உணர்ந்ததாகவைத்துப்) பாவகஞ் செய்வதாகிய பாவனையெனில், அதுபோலிப்பாவனையாம். (ஆதலால் அதனாலும் பயனின்றாம்.)—(அவ்வாறாயின், எவ்வழியாலும் பாவனைக்கெய்தாத பொருள் பாழாம் எனின்,)—தன் அருளால் பாவிப்பது பரம்=(அப்பாவகங்களை யொழித்து)தனது திருவருளால் பாவிக்கப்படுவதாம் பரம்பொருள்—பாழ் இல்=(ஆதலால் நீ கூறும் பாவனைக்கெய்தாமையால்) அதுபாழாதல் இல்லை. (எ-று.)

தான் அசை-பாவகத்தைப் பாவித்தல்=பாவித்தலைச்செய்தல். பாவனை நான்குவகைப்படும். அவை கருவிகளோடு கூடிநின்று பாவித்தல், கருவிகளை நீங்கி நின்று பாவித்தல், இவ்விருதிறனுமின்றிப் பாவித்தல், உணராதபொருளை உணர்ந்ததாகப் பாவித்தல் என்பனவாம். இந்நான்கும் மறுக்கப்பட்டமை காண்க.

இவ்வெண்பாவினாற் போந்தபொருள்—"தன்னையறிந்தாலன்றித் தன்னால் (அதாவது சிவத்தால்) அறிதல் கூடாது. ஆதலால் மேலை வெண்பாவிற் கூறியவாறு 'தன்னால் உணர்தல்' என்பது தன்னைப்பற்றுதல் (அஃதாவது ஒன்றனை ஒன்றுபற்றுதல்) என்னும் குற்றமாகும். ஆதலால், அவ்வாறன்றி வாக்குமனாதீதமாய் நிற்கின்றபொருள் யோகநூலிற் கூறுந் தியானபாவனைகளிற் கோசரமாம் என்பதே பொருத்தமாம்" என்று கூறும் பாதஞ்சலர் கூற்றை யாசங்கித்து, அம்முதற்பொருளின் அருளைக்கொண்டு அதனை யறிதலே "தன்னாலுணர்தல்" எனப்படுதலால் தன்னைப்பற்றுதல் என்னும் குற்றம் உண்டாகுமாறில்லை யென்பதையும், நால்வகைப் பாவனைகளுக்கும் அது கோசரமாகாமையையும் விளக்கி அவர்களை மறுத்து அது தன்னாலன்றிக் கோசரமாகாமையை வலியுறுத்தியவாறும்.

தன்னருளை யறியுமாறும், அதனாற் பாவிக்குமாறும் உண்மையதிகாரத்தில் (ஒன்பதாஞ் சூத்திரத்திற்) பெறப்படும்.

உதாரண வெண்பா.

அறிய விரண்டல்ல னுங்கறிவு தன்னா
லறியப் படானறிவி னுள்ளா—னறிவுக்குக்
காட்டாகி நின்றானைக் கண்ணறியா மெய்யென்னக்
காட்டா தறிவறிந்து கண்டு.

அன்வயம்.—அறிய இரண்டு அல்லன், அறிவினுள்ளான் ஆங்கு அறிவு தன்னால் அறியப்படான், அறிவிக்குக்காட்டாகி நின்றானை அறிவுகண்டறிந்து காட்டாது; மெய்யறியாக்கண் என்ன.

(இ-ள்.) அறிய இரண்டு அல்லன் =(சிவாகமங்களில் அத்துவிதமே கூறுதலால்) உயிர் தன் அறிவால் அறிதற்கு முதல்வன் தன்னின் வேறல்லன் (ஆகலானும்)—அறிவின் உள்ளான் அறிவு தன்னால் அறியப்படான் =(சமமாதலின்றித் தூலசூக்கும முறையில்) தன் அறிவுக்குள்ளாய் நிற்றலின் தன் அறிவினாலறியவாரான் (ஆகலானும்)—அறிவுக்கு காட்டு ஆகி நின்றானை = தன் அறிவுக்கு வியஞ்சகமாய் அறிவித்து உயிர்க்குயிராய் நிற்றலானும், அத்தன்மையான முதல்வனை—அறிவுகண்டறிந்து காட்டாது =(பசுத்துவம் நீங்கிய வழியும்) ஆன்மாவினறிவு தான் கண்டறிந்து (தன் குணியாகிய ஆன்மாவுக்குக் கோசரமாம்படி காட்டமாட்டாது—(எதுபோல

வெனில்)—மெய்யறியாக்கண் என்ன =(தன்னின் வேறின்றித் தனக்குள் நிற்றலினால் தன்னாற்காணப்படாது தனக்குக் காட்டாகிநின்ற) உயிரை அறியமாட்டாத கண்ணொளிபோல (எ - று.)

ஆங்கு அசை. கண்டறிதல் என்பது ஒரு பொருட்பன்மொழி; இது சிறப்பின்கண் வந்தமீமிசை. காட்டு = காட்டுதல் என்னும் பொருளைத்தரும் முதனிலைத் தொழிற்பெயர். கண் என்பது கண்ணொளியை-மெய் என்பது உயிரை. கண் முதலியவற்றை நோக்க உயிர் சத்துச்சித்து என்பது தோன்ற உயிரை மெய் என்றார்.

உயிரின் வேறான பொருளை உயிரின் அறிவு அறிதல் கூடுமேயன்றி, உயிரோடு அத்துவிதமாய் கலந்திருக்கும் முதல்வனை யறியமாட்டாது என்பது தோன்ற "அறிய இரண்டல்லன்" என்றார்.

முதல்வன் உயிரோடு அத்துவிதமாய்க் கலந்திருந்தும் உயிரோடுச் சமமாதலின்றி, உயிர் தூலமாய் வெளிப்பட்டுநிற்க, தான் சூக்குமமாய் வெளிப்படாமல் உயிரின் அறிவுக்குள்ளாக நிற்பன். ஆதலால் மலம்நீங்கிய விடத்தும் உயிரின் அறிவால் முதல்வன் அறியவாரான் என்பதுதோன்ற "அறிவு தன்னால் அறியப்படான் அறிவினுள்ளான்" என்றார்.

முதல்வன் உயிர்க்குயிராயிருந்து, அதின் அறிவுக்குத் துணையாய் நின்று அறிவித்தலால் உயிர் அறியும். ஆதலால் அத்தன்மையான முதல்வனை ஆன்மஞானம் கண்டறிந்து உயிர்க்குக்காட்டமாட்டாது என்பது தோன்ற "அறிவுக்குக்காட்டாகி நின்றானைக் காட்டாதறிவறிந்து கண்டு" என்றார்.

கண்ணொளி கண்ணின் வேறானபொருளை யெல்லாம் அறியும். கண்ணின் உள்ளாய் நிற்கும் உயிரையறியாது. அதுபோல், உயிரின் அறிவு உயிரின் வேறான பொருளை யறிதல்கூடும். உயிர்க்குயிராய் உயிரோடு அத்துவிதமாய் கலந்து நிற்கும் முதல்வனை யறியமாட்டாது என்பார் "கண்ணறியா மெய்யென்ன" என்றார்.

இவ்வெண்பாவினாற்போந்த பொருள்.—"பாவனையும் பசுஞானத்தாலும் பாசஞானத்தாலும் ஆவதனால், சத்தாகிய சிவம் பாவனைக்குக் கோசரமாகாதென்றல் ஒக்கும். ஆனாலும், தன்னருளாற் பாவிக்கவேண்டுவதில்லை, ஆன்மா பசுத்துவம் நீங்கிய முத்தி காலத்தில் சிவத்தைப்போல் முற்றுமுணர்தல் முதலிய எண்குணங்களும் உடையதாம் என்று ஆகமங்கள் கூறுவதனால் அப்போது

ஆன்மாவினறிவு சிவஞானத்தோடொத்த ஞானமேயன்றி பசு ஞானமன்று. ஆதலால் முதல்வன் அவ்வறிவினால் அறியப்படும் கோசரப்பொருளாம் என்பதே பொருத்தமாம்'' என்று சிவசம வாதிகள் கூறுவதை மறுத்துத் தன்னருளாலன்றி முதல்வன் கோசர மாகாமை சித்தாந்தஞ் செய்யப்பட்டது.

திருத்தாண்டகம்.

ஆட்டுவித்தா லாரொருவ ராடாதாரே
யடக்குவித்தா லாரொருவ ரடங்காதாரே
ஓட்டுவித்தா லாரொருவ ரோடாதாரே
யுருகுவித்தா லாரொருவ ருருகாதாரே
பாட்டுவித்தா லாரொருவர் பாடாதாரே
பணிவித்தா லாரொருவர் பணியாதாரே
காட்டுவித்தா லாரொருவர் காணாதாரே
காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக்காலே.

உதாரண வெண்பா.

அதுவென்னு மோன்றன் றதுவன்றி வேறே
யதுவேன் றறியறிவு முண்டே—யதுவேன்
றறிய விரண்டல்ல ஞங்கறிவு ணிற்ற
லறியுமறி வேசிவமு மாம்.

(இ-ள்.) அது என்னும் ஒன்று அன்று=(சத்தாகிய சிவம் ஞேயப்பொருளாய், அதாவது அறியப்படும் பொருளாய், விசிட்ட மாய், அதாவது பசுபதியாய்,நிற்பதென்பது சிவாத்துவித சைவரும் சுத்த சைவருமாகிய உமக்கும் உடன்பாடேயாகலான், அச்சிவம் இன்னதென்றறியவாராத அநிருவசனமாய், அதாவது சொல்லொ ணாததாய், நிற்பதொரு விசேடமற்ற பொருளெனக்கொண்ட மாயா வாதத்தைப்போல) அதுவென்று அநிருவசனமாய்க் கூறப்படுவ தொரு சூனியம் அன்று. (ஆகலான்)—அது அன்றி=அந்த ஞேய மாத்திரையேயன்றி, (அதாவது அருளாலறியப்படும் அச்சிவம் மாத்திரமேயன்றி) வேறு=அதனின்வேறாக—அது என்று அறி அறிவும்=(வாக்குமனாதீதமாய் நிற்பது) அம்முதற்பொருள் என் றறிகின்ற ஞாதாவாகிய உயிரும்—ஆங்கு உண்டே=அம்முத்தி நிலையில் உள்ளதேயாம்.—(அவ்வாறு சிவமும் உயிரும் முத்தியில் வெவ்வேறாய் உண்டென்றால், உயிர் சிவத்தோடு ஒன்றாதல், அதா வது சிவமாதல், பெறப்படாதே யெனின்)—அது என்று அறிய

இரண்டு அல்லன் = (உலகத்தைப் பொருள்போல்) அதுவென்று சுட்டியறியுமாறு முதல்வன் உயிரின் வேருய் நிற்பானல்லன்—அறிவுள் நிற்றல் = உயிரின் அறிவின்கண் முதல்வன் கலந்து வேற்றுமை தோன்ருது நிற்றலால்—அறியும் அறிவு சிவமும் ஆம் = (நீரோடு கலந்த உப்பு நீரேயாய் நிற்றல்போல்) சுட்டியறியும் அறிவுகெட்டு முதல்வனருளாலறிகின்ற அவ்வுயிர் சிவமேயாம். (எ-று.)

சிவமுமாம் என்பதில் உள்ள உம்மை உயிர் கலப்பினுல் சிவமாயும், பொருளின் தன்மையால் உயிராயும் இருத்தலை விளக்கி நின்றது.

ஏகான்மவாதிகள் துவம்பத லட்சியார்த்தமாகிய சித்தே தற்பத லட்சியார்த்தமாகிய சிவம் என்பர். வாச்சியார்த்தம் தடத்தமும் லட்சியார்த்தம் சொரூபமுமாம். தடத்த நிலையில் உயிரும் சிவமும் அந்நியமாயிருக்கும்-சொரூபநிலையில் அவ்விரண்டும் அனந்நியமாயிருக்கும். அதுபற்றியே உயிர் சிவம் என்று ஆகமங்கள் கூறும். இவ்வளவேயன்றிச் சிவமன்றி உயிர்வேறில்லை யென்பது கருத்தன்று. உயிர்வேறில்லையாயின் இன்ப அநுபவமும் இல்லையாய்விடும். இன்ப அனுபவமும் இல்லையென்பதே தமது கொள்கையென்பரேல், அநுபவிப்பவனும் அநுபவமும் இல்லாதபோது அநுபவிக்கப்படும் பொருளும் இல்லையெனப்பட்டு அவர்வாதம் சூனியவாதமாம்.

இவ்வெண்பாவினுற் போந்த பொருள்.—முத்தியில் முதல்வனேடு கூடிய உயிர் அம்முதல்வனேடு ஒன்ருய்ப் போதலினுல் அந்நிலையில் அறியும் பொருளும் அறியப்படும் பொருளும் இல்லை எனச் சிவாத்துவித சைவரும் சுத்தசைவரும் கூறுவதை மறுத்து, உயிர் முதல்வனுடன் கூடி ஒன்ருனவிடத்தும் உயிர் அறிவதும் முதல்வன் அறியப்படுதலும் உண்டென்று விளக்கியவாறும்.

இவ்வதிகரணத்தாற் போந்தபொருள்—இவ்வதிகரணவெண்பாக்கள் ஐந்தில் முதல்வெண்பாவால் "முதற்பொருள் வாக்குமனுதீதமென்றல் பொருந்தும் கோசரமாமென்றல் பொருந்தாது" என்னும் மாயாவாதிகளையும், இரண்டாவது வெண்பாவால் "கோசரமாமென்றல் பொருந்தும். வாக்குமனுதீதமென்றல் பொருந்தாது" என்னும் நையாயிகர் முதலியோரையும், மூன்ருவது வெண்பாவால் "பாவனைக்குக் கோசரமாம்" என்னும் பாதஞ்சலரையும், நாலாவது வெண்பாவால் "ஆன்மஞானத்திற்கே கோசரமாம்"

என்னும் சமவாத சைவரையும், ஐந்தாவது வெண்பாவரல் "முத்தி யிற் சிவமேயன்றி உயிரென வேறின்மையின் உயிர்க்குக் கோசர மாதல் என்பதொன்றில்லை" என்னும் சிவாத்துவித சைவர் முதலி யோரையும் மறுத்து முதல்வன்வாக்கு மனோதீத கோசரமாய் நிற் கும் இயல்பை வலியுறுத்தியவாறும்.

இவ்வாறு முதல் மூன்று சூத்திரங்களினால் (பிரமாண இயலில் உண்டென்று சித்தாந்தஞ்செய்த) பசு பாச பதிகட்கு இலக்கணங் கூறுமுறையில் நான்காஞ் சூத்திரத்தால் சகச மலத்துணராது கிடக்குங் கேவலாவத்தையும், ஐந்தாஞ் சூத்திரத்தால் கருவிக ளோடுகூடி விடயங்களை யறியுஞ் சகலாவத்தையும், ஆறாஞ்சூத்தி ரத்தால் பாசஞான பசுஞானங்களைக் கடந்து பதிஞானத்தாற் சிவனையறியுஞ் சுத்தாவத்தையும் காட்டப்பட்டன.

இலக்கணவியல் முற்றிற்று.

---

## சிவராத்திரிவிரதம்.

(திருவனந்தபுரம் இந்து சுதர்மாசார சபா பிரசுரம்.)

தங்கள் தங்கள் இஷ்டதேவதையைக் குறித்து உபவாச மிருந்து விசேஷமாக பூஜாதிகளைச்செய்து மறுநாள் அதிதியோடும் பந்துக்களோடும் பாரணைசெய்வது விரதமெனப்படும். விரதங்கள், நித்தியவிரத மெனவும் நைமித்திக விரதமெனவும் இரண்டு விதங்க ளாம். நித்திய விரதமென்பவை, அடுத்தடுத்துவருகிற வாரவிரதம் பக்ஷவிரதம், மாசவிரதம் முதலானவை. நைமித்திகவிரதமென்பவை, வருஷத்திலொருமுறை, அல்லது முன்கருதலின்றி வருவது முதலா னவை. தன்னூரிலிருக்கும் ஓர் அன்னியனுக்கு அன்னமளிப்பது எத்துணைப்புண்ணியமோ, அதற்காயிரம் பங்கு அதிகபுண்ணியம் தூரதேசத்திலிருந்து அதிதியாகவந்த ஒருவனுக்கு அன்னங்கொடுப் பது. அதுபோல நித்தியவிரதத்தைக் காட்டிலும் நைமித்திக விர தம் உயர்ந்ததென்பர் மேலோர்.

வருஷத்திலொருதடவை துர்லபமாய் வருவதாகையால் சிவ ராத்திரி விரதம் நைமித்திகவிரத மெனப்படும். இராத்திரி நாலு யாமமும் நித்திரையின்றிக் கடவுளை விசேஷமாகப் பூஜிக்கும் விர தத்துக்கு சிவராத்திரி விரதமென்று பெயர். "ச்யதி துக்காதிக மிதி சிவா" சிவ என்பதற்கு துக்காதிகளை யழிக்கின்றது என்று

பொருள். "ராதி-சுகமிதி-ராத்திரி". ராத்திரி என்பதற்கு சுகத்தைச்செய்கின்றது என்று பொருள். ஆதலால் சிவராத்திரி என்பது துக்கங்களைப்போக்கிச் சுகத்தைக்கொடுப்பது என்றுபொருள்படும். ஓர் மனுஷன் எவ்வகைச்சுகத்தை யநுபவிக்குங்காலத்தும், சொற்பமேனும் இடையில் துக்கமின்றிச் சுகமடைய இயலாது. உலகத்திலிருந்து அநுஷ்டிப்பவை அல்லது, அனுபவிப்பவையாவும் சுகதுக்க மிஸ்ரமாயிருக்கும். துக்கத்தைவிட்டுச் சுகத்தைமாத்திரம் அநுபவிக்கவும், பாபத்தை யொழித்துப் புண்ணியத்தைமாத்திரம் பிரதிதினமும் அனுஷ்டிக்கவும் லோகவியாபாரத்தில் சம்பந்தப்பட்ட எவ்வகை மாந்தருக்கும் அசாத்தியமாம். ஆதலினால், புண்ணியத்தைமாத்திரம் செய்ய விரும்புகிறவர்கள் அதற்காக ஒருதினமேற்படுத்திக்கொண்டு அத்தின முழுவதும், மனம், வாக்கு, காயங்களாகிய மூன்று கரணங்களாலும், பிரபஞ்ச வியாபாரங்களைவிட்டு, கேவலம் பரமாத்மாவினிடத்தில் பக்திசெய்யப் பழகவேண்டும். அப்படிப் பக்திசெய்வதற்குச் சிவராத்திரி தினமே மிகச்சிறந்ததாதலால், சிவராத்திரி விரதம் மிகமேன்மையுள்ள விரதமெனப்படும்.

நாயிற்றுக்கிழமைமுதல் சனிக்கிழமை யீருயுள்ள வாரங்களில் எந்தெந்தவாரம் எந்தெந்ததேவதைக்கு உரியதோ அல்லது பிரீதியோ, அந்தந்தவாரத்தில் பகல் ஒருநேரம் உண்டு இராத்திரி உபவாசமிருப்பது வாரவிரத மெனப்படும். இவ் வார விரதங்களில் சன்னியாசிகள், விதவைகள், நைஷ்டிகப் பிரம்மசாரிகள், மோக்ஷ இச்சையுடையவர்கள் ஆகிய இவர்கள் இரண்டு நேரமும் உபவாசங் கொள்வர்.

பக்ஷவிரதம் இரண்டுவிதங்களாம். வாரவிரதத்தைப்போல் இராத்திரி ஒருநேரமுண்டு பகல் உபவாசமிருக்கும் பிரதோஷ விரதமும், இரண்டு நேரமும் ஆகாரமின்றி யுபவாசமிருக்கும் ஏகாதசி, சஷ்டியாதி விரதங்களுமாம். மாசவிரதம் மூன்றுவிதமெனப்படும். வாரவிரதத்தைப்போல் பகல் ஒருநேரம் உண்டு இராத்திரி உபவாசமிருக்கும் அமாவாசை பௌர்ணமி சங்கராந்தியும், பக்ஷவிரதங்களிலொன்றாகிய ஏகாதசி, சஷ்டியாதிகளைப்போல இரண்டுநேரமும் ஆகாரமின்றி உபவாசமிருக்கும் அசுவனி பரணி கார்த்திகையாதி நக்ஷத்திரங்களும், முப்பது தினமும் பகல் ஒருநேரமுண்டு இராத்திரி உபவாசமிருந்து மாசாந்தத்தில் ஒருநாள் முழுவதும் உபவாச

மிருப்பதும், முப்பது தினமும் இராத்திரி ஒருநேரமுண்டு பகல் உபவாசமிருந்து மாசாந்தத்தில் ஒருநாள் முழுவதும் உபவாச மிருப்பதுமாம். இரண்டுநேரம் உபவாசமிருப்பதுடன் நித்திரை யின்றி இராத்திரி நாலுயாமமும் கடவுளை உபாசிப்பது வருஷவிரத மெனப்படும். அடிக்கடி யுணவையொழித்து உபவாசமிருந்து கட வுளை உபாசிக்கப் பல விரதங்கள் ஏற்பட்டிருப்பினும், இரண்டுநேர உணவையும் ஒழித்து அதனுடன் நித்திரையையும் ஒழிப்பது அதி தீவ்ரவைராக்கியமாகையால், மேற்படி வருஷவிரதமாகிய சிவராத் திரி விரதம் மிகுமேன்மையுள்ளதெனக் கணிக்கப்பட்டது.

அன்றியும், நதிகளில் கங்கையும், எழுத்துக்களில் அகரமும், தேவர்களில் இந்திரனும் பிரதானமாவதுபோல், விரதங்களில் சிவ ராத்திரிவிரதம் பிரதானமெண்பது சாஸ்திரங்களின் துணிபு.

மாசிமாசத்து கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி திதியில் அனுஷ்டிக்கும் இச்சிவராத்திரி விரதத்தில் உபவாசமிருந்து நான்குயாமமும் நித் திரையின்றிச் சிவபெருமானை பூஜைசெய்தல் வேண்டும். அப்பிரகா ரம் பூஜைசெய்ய அதிகாரமோ அனுகூலமோ இல்லாதவர்கள் நித் திரையின்றி ஸ்ரீ பஞ்சாக்ஷரஜபம் அல்லது வேறு சிவநாம ஜபமும் சிவபுராண சிரவணமும் செய்து நான்குயாமமும் சிவாலய தரிசன முஞ் செய்தல்வேண்டும். இதில் உபவாசம் உத்தமம். நீரேனும் பாலேனும் உண்பது மத்திமம். பழவர்க்கங்களுண்பது அதமம். தோசை முதலிய பணியாரங்களுண்பது அதமாதமம். சிவராத்திரி தினத்திலே இராத்திரி நாலுயாமமும் நித்திரையொழிக்க இயலாத வர்கள், இலிங்கோற்பவ காலம் நீங்கும் வரையினுமாயினும் நித் திரை யொழித்தல்வேண்டும். இக்காலத்தில் சிவதரிசனம் மிகமே லாகிய புண்ணியமாம். இலிங்கோற்பவகாலம் இராத்திரி பதினான்கு நாழிகைக்குமேல் ஒரு முகூர்த்தகாலம்.

உணவை விடுத்து அல்லது சுருக்கி இவ்வாறு விரதங்களை யனுஷ்டிக்கும் ஏற்பாடானது, மனம்பொறிவழிபோகாது குவிந்து நின்று கடவுளை விதிப்படி மெய்யன்போடு விசேஷமாக வழிபடற்கு விதிக்கப்பட்ட ஏற்பாடாம்.

விரதமனுஷ்டிப்பவர்கள், அவ்விரததினத்திலே காமம் குரோ தம் முதலிய குற்றங்களை நீக்கி, தவறாமல் விடியற்காலத்தில் நித் திரைவிட்டெழுந்து, தேகோபாதிகளைத் தீர்த்து, விதிப்படி சௌசஞ்

செய்து ஆசமனம் முடித்து, புண்ணியதீர்த்தத்தையடைந்து, விபூதி, வில்வத்தடிமண், தருப்பை, கோமயம், திலம், என்பவைகளிலொன்றைச் சிரசிலேவைத்து, கையிலே பவித்திரஞ்சேர்த்து சங்கற்பஞ்செய்து ஸ்நானம்பண்ணி, வஸ்திரமுடுத்து, திருநீறணிந்து, ஜபம், பூஜை, தியானம், ஆலயதரிசனம், பிரதக்ஷிணம், புராணசிரவணம், ஸ்தோத்திரம் முதலியன விசேஷமாகச்செய்து, திருக்கோயில்களிலே இயன்றமட்டும் நெய்விளக்கேற்றி (பொருளுடையவர்கள்) அபிஷேகதிரவியம் நிவேதனதிரவியங்கள் கொடுத்து பரமசிவத்தை ஆராதித்தல் வேண்டும். உபவாசவிரத தினத்திற்கு முந்தினதினத்திலே ஒருபொழுது அபரான்னத்திலே போஜனஞ்செய்தல் வேண்டும். விரததினத்தின் மறுதினத்தில் பூஜை முதலானவைகள் முடித்துக்கொண்டு ஆறுநாழிகைக்குள் அதிதியோடும், சுற்றத்தாரோடும் பாரணம்பண்ணல் வேண்டும். பாரணம்பண்ணிய பின்பகலிலே நித்திரை செய்யாது வேதாகம புராணங்களை அவரவரதிகாரத்துக்கும் பக்குவத்திற்கும் தக்கவாறு காலக்ஷேபஞ் செய்தல்வேண்டும்.

இவ்வாறு சங்கற்பித்த காலவெல்லைவரையும் விரதத்தை விதிப்படி யனுஷ்டித்து முடித்தபின் உத்யானம் செய்தல்வேண்டும். ஆசௌசகாலத்திலும் ஸ்திரீகள் வீட்டுக்கு விலக்காயுள்ள நான்கு நாளிலும் விரததினங்கள் வந்தால் விரதமனுஷ்டியாது விட்டுவிடல் வேண்டும். கணவனுள்ள ஸ்திரீகள் கணவனோடொருமித்தன்றி தாங்கள் தனித்து யாதொருவிரதமும் எடுக்கவாவது இருக்கவாவது கூடாது. மகாசிவராத்திரிவிரதம் முன்னொரு கற்பத்தில் மும்மூர்த்திகளில் பிரமதேவர் தம்தொழிலிலிருந்து நீங்கி உலகமுழுதும் பிரளயமூடியகாலில், அந்த இராத்திரியாகிய பிரளய அவசரத்தில், ஆன்மாக்கள் உய்யும்பொருட்டு சிவசக்தியாகிய உமாதேவியார் நாலுயாமமும் சிவபூஜைசெய்து புலரிக்காலத்தில் சிவபெருமானை நோக்கி தாம் வழிபட்ட இவ்விராத்திரியானது சிவராத்திரி எனப்பட்டு, இவ்விரதத்தைக் கிரமப்படி அனுஷ்டித்துத் தங்கள் தங்களிஷ்டதேவதையைப் பூஜைசெய்பவர்கள் முத்திபெறல் வேண்டுமென்று வேண்டிக்கொள்ள சிவபெருமான் அப்படியே வரங்கொடுத்தருளினர். இம்மகா சிவராத்திரியிலே மேற்சொன்னவாறு உபவாசமிருந்து நான்குயாமமும் நித்திரையின்றிச் சிவபூஜைசெய்தல் வேண்டும். நான்குயாம பூஜையும் அவ்வக்காலத்தில் செய்வது உத்தமம். ஒருகாலத்தில் சேர்த்துச்செய்வது மத்திமம். இச்சிவ

ராத்திரி விரதம் சைவர்களால் கட்டாயமாய் அநுஷ்டிக்கத்தக்கது. உபவாசமிருந்து விரதங்களை யனுஷ்டித்தல், ஆஸ்திகர்களாகிய சகல மதஸ்தர்களுக்கும் இன்றியமையாதது. நமது இந்துமதத்தி லுபதேசிக்கப்படுகின்ற சகல விரதங்களும், காலதேச வர்த்தமானங் களையும், ஜாதி, மதம், தொழில், படிப்பு, வயது, சம்பத்து, விபத் துக்களையும் அநுசரித்து, அவரவர் பக்குவத்துக்குத் தக்கவாறு தேகரக்ஷைக்கும் ஆத்துமரக்ஷைக்கும் இன்றியமையாதனவாக ஏற் படுத்தப்பட்டனவாம்.

தேகரக்ஷையாவது.

ஒரு மனுஷன் பிரதிதினமும் இரண்டு மூன்று, நான்குநேரம் பல பல பக்ஷியபோஜ்யங்களோடு சாப்பிட்டுக்கொண்டு வருகிற ஸ்திதியில் இடை இடையே உபவாசமிருப்பது தாதுக்களைச் சமா னப்படுத்தி தேகத்துக்கு மிகுந்தலாகவந் தரும். இவ்வாறு தேக சௌக்கியத்தைக் கொடுக்குமென்பது வைத்திய சாஸ்திர தர்ம சாஸ்திரங்களின் துணிபு. நமக்குக்கிடைத்திருக்கும் இம்மாநுட ஜன்மத்தின் உத்தேசம், தர்மார்த்த காமமோக்ஷங்களாகிய நான்கு புருஷார்த்தங்களையும் தேடியடைதற்கன்றி, வேறல்ல. தேகரக்ஷை யிருந்தாலன்றி புருஷார்த்தங்களைச் சம்பாதித்தடைதல் அசாத்தி யம். தேகரக்ஷையும் அவரவர் தேகதிடத்துக்கும் மற்றச்சௌகரி யங்களுக்குந் தக்கபடி, உபவாசவிரதங்களை பக்தியோடநுஷ்டித்து வருவதனாலுண்டாகுமென்பது, சாஸ்திரங்களின் துணிபு. ஆதலால் விரதோபவாசங்கள் தேகசௌக்கியத்திற்கு ஆவசியகமென்று இதி னாலேற்படுகின்றது.

ஆத்மரக்ஷையாவது

கடவுளையுபாசிக்க, மனதிற்கு மேற்பட்ட கருவியில்லை. மன மோ அன்னமயம். ஆகாரத்தின் அம்சங்கள் சென்று மனதை புஷ் டிப்படுத்த அது பொறிவழிகளிற் சென்று விபசரிக்கும். உபவாச மில்லாதவன் மனதை அகமுகப்படுத்திக் கடவுள்தியானத்தில் நிலைக் கவைப்பது பிரயாசம். உபவாசத்தால் இந்திரிய வியாபாரங்களொ டுங்கும். ஒடுங்கவே அதனோடு மனோவியாபாரமும் ஒடுங்கும். ஒடுங் கியமனதினால், ஈசுவரோபாசனை நன்குசெய்யப்படும். ஆதலால் கட வுளுபாசனைக்கு உபவாசங்கள் அத்தியாவசியம் வேண்டப்படும் நியாயம் இதனால் நன்குவிளங்கும். நம்முன்னோர்கள் இதுபோன்ற பலதத்வ இரகசியங்களைக் கண்டறிந்து சிவராத்திரி முதலிய விர

தாதிகளையும் ஏனை தர்மங்களையும் விதித்திருப்பதை அனேகர் ஆசரித்து சற்கதியடைந்தார்கள். அவ்வுண்மைகளைச் சாஸ்திர புராண வாயிலாக நமக்கு மெடுத்துக்காட்டி யிருக்கின்றார்கள். ஆதலால் சர்வோத்கிருஷ்டமான சிவராத்திரி விரதத்தை இந்துக்கள் பயபக்தி விசுவாசத்தோடு அனுஷ்டித்துக் கடைத்தேறுவாராக.

இந்து மகாஜனங்களே; கீழ்வருவனவற்றைத் தயைசெய்து கொஞ்சங் கவனமாய்ப் பாருங்கள்:

இக்காலம் மதசம்பந்தமான படிப்பு குறைந்து, லௌகிக விவஹாரங்களின் படிப்பே யதிகரித்துவருகின்றது. அதனுல் நம்மத விஷயமா யாதொன்றுந் தெரிந்துகொள்ள தற்காலம் நம்மவர்களுக்கு வழியில்லை. விரதம், தவம், தானம் முதலிய தேகாத்தும ரக்ஷகளுக்கு அவசியமான சத்கருமங்களின் உண்மையறியும் வழியும் இவர்களுக்கில்லாதிருக்கின்றது. "கோடிவித்தை-கூட்டிக்கு" என்ற தெலுங்குவாக்கியத்திற்கிணங்க, தற்காலம், எல்லாம் சாப்பாட்டு வித்தையாகி, அதற்குப்பொருள் தேடுவதும், வரையின்றிக்கண்டதைத் தின்று குடித்துக் காலங்கழிப்பதுமே பெரியதவமும் விரதமுமாக முடிந்தன. விரதாதிகளின் உபகார உபயோகங்களையும் அவற்றை அனுஷ்டிக்கவேண்டிய நியாயாவசியங்களையும், அறியவும் அறிவிக்கவும் நம்மில் தக்க ஆட்களில்லை. இச்சமயத்தில், சிலரேற்பட்டு "தானமில்லை, தவமில்லை, விரதமில்லை, அவையாவும் வீண்" என்று, ஏதுமறியாத ஏழைஜனங்களுக்கும் பாலியருக்கும் ஓர் புறம் போதிப்பார்கள். அப்போதனைகளைப் பெரியோர்கள் உடனுக்குடன் மாற்றி வராவிடில், சில பாலியரும் ஏழைஜனங்களும் மயங்கிக் கெடக்கூடும். தவம், தானம், விரதமாதி சத்கருமங்களை, வீண் என்று சொல்பவர்கள், தங்கள் நலத்தைத் தாங்களேயறியாதவர்கள்; தத்துவஞான மில்லாதவர்கள்; ஜக ஜீவபரங்களினியல்புகளும் பிறவி வருங் காரணமுமறியப்பெறாதவர்கள்; கர்மமும் ஜன்மாந்திரக்கொள்கையும் அவர்களுக்கில்லை; இல்லையென்று அவற்றை அவர்கள் ஒதுக்கினுலும் அவ்விரண்டும் அவர்களைவிட்டொதுங்கா. ஏனெனில், தன்னிழல் தன்னைவிட்டு நீங்குமாறில்லாததுபோல, கர்மமும், ஜன்மமும் ஒருவனைவிட்டு என்றும் நீங்குமாறில்லை என்னும் இயற்கைநீதி இந்துவேதாகம சாஸ்திரங்களில் அறுதியிட்டிருக்கின்றது.

உலகில் மானிடராய்ப்பிறந்து செய்யவேண்டியவினைத்துஞ் செய்துமுடித்து நான் எனதென்னுங் குறும்பறுத்து எல்லாம் சிவமயம் எனக்கண்டுவாழும் மகாத்துமாக்களாகிய பிரமஞானிகளுக்கு ஒருசமயம் விரதாதிகள் வேண்டாதொழியலாமேயன்றி, கேவலம் மலபந்திகளாகி லௌகிகவியாபாரமோகத்தில் முழுகிவாழும் சிலர்களுக்குத் தான, தவ, விரதாதிசத்கர்மங்களில்லையாயின், தீனியாதி விஷயசுகாநுபவங்களே பொருளெனமயங்கும் ஆசுரத்தன்மையடைந்து முடிவில் அவர்கள் அதோகதியே சேர்வார்கள். பிரமஞானிகளுங்கூட தங்களுக்கு கரணேந்திரியப்பிரவர்த்தகம் நிகழுங் காலபரியந்தம் விஷயவாசனை பையவந்து ஏறுமைப்பொருட்டும், லோகோபகாரார்த்தமாகவும், தான, தவ விரதஹோமாதி சத்கர்மாநுஷ்டானங்களைக் கைவிடார்களென்பது பெருநூல்களின் துணிபாம்.

“கடவுளிடத்தில் விசுவாசம் ஒன்றேபோதும், தவ விரதமாதிகள் அவசியமில்லை” என்றுசிலர் சொல்லுவார்கள். விசுவாசம், என்று வெறுமனேவாயினாற் சொல்லித்திரிவதும், மனம் அங்குமிங்குங் குரங்குபோலலைய, கண்ணைமூடிக்கொண்டு வாயினாற் பலர்கூடி பிரார்த்தனை பண்ணிவிடுவதும், கடவுளை மெய்யாக விசுவாசித்தலும் வழிபடுதலுமாகாவாம். கடவுளிடத்தில் இருதயம் பதிந்து விசுவசித்தல் தான் மெய் விசுவாசமாகும். இருதயங் கடவுளிடத்தில் பதிந்து நிலைப்பதற்கே மனவொடுக்கமும், மனவொடுக்கத்திற்காக இந்திரிய வியாபாரவொடுக்கமும், அவ்விரண்டொடுக்கங்களும் எளிதிற் கைவரச்செய்வதற்கு உதவியாயுள்ள உபவாசசகிதமான, விரத, தவமாதிகள் அத்தியாவசியம் வேண்டப்படுமுண்மையை, இயற்கைத்தருமமுணர்ந்த இந்துவேதாகம சாஸ்திராதிகள் மனிதருக்கு மிகுந்த கருணையோடு விதித்து உபகரித்திருக்கின்றன, என்று நம்மவர்கள் திருப்பி அவர்களுக்கு மறுமொழி கூறவேண்டும். இந்து மகாஜனங்கள் இத்யாதி பரிசுத்த பிரபல யுக்தி நியாயசகிதமாயுள்ள தத்வவுண்மைகளைப் பெரியோர்பால் கேட்டறிந்து, அன்னியரது அஞ்ஞானபோதனைகளில் மயங்காமல் தங்களாலியன்றவரையில் விதிப்படி தான, தவ, விரதஹோமாதி சத்கருமங்களை நிரந்தரமனுஷ்டித்து திரிகரணசுத்தர்களாகி, கிடைத்தற்கரிய மானிடப்பிறவியின் பயனடைவார்களென்று நம்புகிறோம். அவ்வாறே சிவபெருமான் கிருபைசெய்வாராக. சுபம்.

# ஆதிசைவகுல மான்மியம்.

(257-வது பக்கத்தொடர்ச்சி.)

ஆகவே, அப்பிராமணர்கள் சிவப்பிராமணர்களையும், சிவாகமாதிகளையும், நிந்தித்தற்குக்காரணம், பற்பல முனிவர் சாபங்களென்னுஞ் சுருதிப்பிரமாணம் ஈண்டுக் காட்டியவாறாயிற்று. இதனைப் பார்வதிதேவியாரும் விளக்கியருளினர். அதாவது, இமோற்பர்வதத்தில், பரமசிவனைப் பர்த்தாவாக அடையும்படி பார்வதிதேவியார் தவஞ்செய்திருக்குமிடத்து, அவரதுபேரன்பை யாவருக்குங் காட்டி யுய்விக்கத் திருவுளங்கொண்ட பரமசிவன், ஒரு விருத்த வேதியராய் விபூதிருத்திராக்ஷ தாரணராய் அங்குவந்தருளி, அப்பரமசிவன், அக்கிரமஞ்செய்தாரை அடக்கித் தண்டித்து ஆளுகின்ற சர்வ சக்திமான் சர்வ கர்த்தா விருப்பு வெறுப்பில்லாதவனென்கின்ற பதிலட்சணத்தை விளக்குதற் கிடமாகிய எலும்பு, தோல், சாம்பல் முதலியவற்றை யணிந்திருத்தலையும், மயானவாசமுதலியவற்றையுமெடுத்துக்காட்டி, யிகழ்ந்து கூறிய சமயம், பார்வதி தேவியார் திருவுளம் பதைத்துச் சிவசிவ என்று திருச்செவிகளைப் பொத்திக்கொண்டு, திருவாய்மலர்ந்தருளிய திருவிருத்தங்கள் பின்வருவன காண்க.

முறைபடு சுருதி யெல்லா மொழியினு மதுவே சார்வாய்
உறாகில ராகிப் பொல்லா வொழுக்கமே கொண்டு முக்கண்
இறைவனை யிகழ்ந்து முத்தி யெய்திடா துழல முன்னாள்
மறையவர் பெற்ற சாப மின்னையு மயக்கு றாதோ.

தாதையாய்த் தம்மை நல்கித் தந்தொழிற் குரிய னாகி
ஆதியாய்த் தங்கட்கின்றி யமைவுறாச் சிவனை நீங்கி
யேதிலார் பக்க மாகி யில்லொழுக் கிறந்தார் போலும்
வேதியர் முறையே செய்தாய் வெறுப்பதெ னின்னை யானே.

(இ - ள்.) எனைத் தேவர்கட்கும், ஆங்காங்குப் பரத்துவங் கூறினும், அவையெல்லாம், அவர்களுடைய அந்தந்தப் புவனத் தலைமை நோக்கிக் கூறிய வுபசாரமே யென்பதை, உபக்கிரம உபசங்காராதிகளால் விளக்கி, உண்மையிதுவேயென்று முறைப்படுத்தோதுகின்ற வேதவேதாந்தங்களெல்லாம், பரமசிவனொருவனே கர்த்தா, அரிப்பிரமாதிதேவர் முதலிய யாவரும் அவனை வழிபட்டு அருள்பெற் றுய்யவேண்டிய சீவர்களே யென்பதைத், தியேயவாசக

முதலிய முக்கியப் பிரமாணங்களால் எடுத்துக்காட்டியிருக்கவும், அவ்வுண்மை நெறியே தமக்குறுதிபயப்பதென மேற்கொள்ளாதவர்களாய், அத்தகைய சைவசித்தாந்தத்துக்கு வேறாகிய பொல்லாத மார்க்கங்களையே மேற்கொண்டு, முக்கணுடைமையாலும் பரத்துவம் விளக்குகின்ற பரமசிவனை யிகழ்ந்து, ஒருகாலத்தும் முத்தியடையாமல், நரகவேதனைப்பட்டு உழலும்படி முற்காலத்திலே பிராமணர்கள் எல்லாரும் பெற்றசாபம், அப்பிராமணரில் ஒருவனாகிய உன்னையும் மயக்கமாட்டாதா? அந்தமயக்கத்தாலல்லவா! இவ்விதமான சிவநிந்தனை செய்தாய், பிராமணர்க்குரிய அதிமுக்கியதெய்வம் பரமசிவனென்றும், க்ஷத்திரியர்க்கு விஷ்ணுவென்றும், வைசியர்க்குப் பிரமனென்றும், சூத்திரர்க்கு இந்திரனென்றும், வேதங்கூறுகின்ற முறைமையால், பிராமணர்களாகிய உங்களுக்குச் சிவசத்திகளாகிய தங்களைப் பிதாமாதாக்களாகத் தந்து, நீங்கள் செய்கின்றயாகாதி சகலகிருத்தியங்களுக்கும் தானே அதிமுக்கிய உரிமைத் தலைவனாய், அரிப்பிரமேந்திராதி ஸமஸ்த தேவர்க்கு முதல்வனாய், உங்களுக்கு இன்றியமையாத பெருஞ் சிறப்புடையவனாகிய பரமசிவனையே, பிராமணர்களாகிய நீங்கள் எல்லோரும், இன்றியமையாத முழுமுதற்றலைவனாகக் கொண்டு வாழவேண்டியதே. தனக்குரிய நாயகனேயன்றிக் கனவிலாகிலும் வேறெவ்விடத்தும் மனமுஞ்செல்லாத அவிபசார உத்தமதர்ம பத்தினியின் செயல்போல, உங்களெல்லோருக்கும் முக்கிய உரிமையாய் இருக்கவும், அப்பரமசிவனை வழிப்பட்டுய்யவேண்டியதை யொழிந்து அவனில் வேறாகிய மற்றைப் பிரம விஷ்ணு வாதியரைச் சிவனடியவரெனக்கொள்ளாது, பரம்பொருளெனக்கொண்டு, அந்தந்தத் தேவதாபக்ஷமாய், அக்கினிசாக்ஷியாக விதிப்படி தன்னைப் பாணிக்கிரகணஞ் செய்தநாயகனைக் கைவிட்டுப் பரபுருஷர்களிடத்திற்சென்று இல்லறநெறிதவறின வியபிசாரிகள்போன்றவர்கள், பிராமணர்களாகிய நீங்களல்லவா! ஆனபடியினால், அப்பிராமணர்கள் செய்யும் வியபிசாரமுறைபோலவே, அவர்களுள் ஒருவனாகிய நீயும், வந்தித்து மேற்கொள்ளவேண்டிய பரமசிவனை நிந்தித்து, வியபிசாரத்தன்மையே செய்தாய். இது, உங்கள் சாதியின் சாபச்செயலாய் முடிந்ததால், உன்னை நான் வெறுப்பானேன் என்று உமையம்மையார் விரித்து விளக்கிக்கூறிய இதனாலும், அப்பிராமணர்கள் சாபக்கிரஸ்தரென்பது தெளிவாயது.

ஆனால், அப்பிராமணர்களின் எல்லோரும் அப்படிப்பட்டவர் களா? அநேகர்கள் சிவபக்த சிரோன்மணிகளாய், வேதசிவாகமாதி சிவசாஸ்திர பரிசீலனர்களாய், சிவப்பிராமணாதி சிவபக்தப் பிரியர் களாய், வாழுகின்றார்களே யென்றால், அவர்களெல்லாம், மேற் கூறிய முனிவர் சாபத்திலகப்படாத உத்தம சிவபக்தர்களென்க. அதனையும் அப்பார்வதி தேவியாரே பின்பு விளக்கியருளினர். அத னைப் பின்வருஞ் செய்யுளாற்காண்க.

ஆயினு மறையோர் தம்மி னருமறை முறையே வேடந்
தூயன தாங்கி யெங்கோன் றொண்டுசெய் வோரு முண்டால்.
என்பதாம். இதன்பொருள்.

பிராமணர்களெல்லாரும் பல முனிவர் சாபமேற்றவர்களாய் இருந்தாலும், அவர்களுள்ளே அச் சாபத்தி லகப்படாமல், ஆரிய வேதசிவாகம முறைப்படி, அதிபரிசுத்தமாகிய விபூதி ருத்திரா க்ஷாதி சிவவேடமே தாங்கி, ஸ்ரீபஞ்சாக்ஷராதி செபதப தியான பரர்களாய், சர்வலோக நாயகராகிய பரமசிவனுக்கும், பரமசிவ னடியார்களுக்கும் உரிய திருத்தொண்டுகளே செய்து வாழுகின்ற உத்தமர்களும் பலருண்டு என்பதாம். பார்வதி தேவியார் திருவாய் மலர்ந்தருளிய திருவாக்கின் விசேடத்தின்படி, அக்காலத்திற்போ லவே இக்காலத்திலும் நாங்கள் யாவரினு முயர்ந்தசாதி யென் றெண்ணி அகங்கரித்தெழும்புகின்ற சாதிமலத்தடிப் பொருசிறிது மின்றி, "ஆரேனு மன்புசெயி னங்கே தலைப்படுங்காண், ஆரேனுங் காணவரன்." என்னுந் திவ்விய சுருதியைச் சிரமேற்கொண்டவர்க ளாகியும், மற்றைப்பிராமணர்கள் சூரியன், கணபதி, அம்பிகை விஷ்ணு, பரமசிவன், எல்லாரையுஞ் சமமெனக்கொண்டு ஏகாசனத் தில் வைத்துப் பூசித்தல்போலச் செய்யாமல், பரமசிவனை உன்னத பீடத்தில் வைத்துப் பூசித்து வழிபடுகின்றவர்களாகியும், மற்றைப் பிராமணர்கள், அறுபத்துமூவர் முதலிய உண்மை நாயன்மார்க ளைச் சாதியாதிகுறித்துப் பராமுகஞ்செய்து நரகத்துக்காளாதலை நோக்கி, அந்தோ இவர்கள் பாபமிருந்தவா றென்னே யென்று பரிந்து, சாதியாதிகள் சரீர நோக்கியன்றிச் சிவனடி நீழலில் இரண் டறக்கலந்த சைதன்னியங்களுக்கில்லையே யென்னும் உண்மைமேற் கொண்டு, அப்பிராமணர்களும், அவ்வுண்மை நாயன்மார் மகிமை விளங்கப்பெற்று வழிபாடு செய்துய்யும் பொருட்டு, நாயன்மார் மகிமை விளக்குகின்ற உபமன்னிய, அகஸ்திய, பக்தவிலாச முத

ஷிய, நூல்களை நித்திய பாராயணமாகச் செய்கின்றவர்களாகியும், சபைகள் முதலிய புண்ணியஸ்தானங்களிற் படித்துப் பிறர்க்கும் விளக்குகின்றவர்களாகியும், அந்தந்தத் திருநக்ஷத்திரங்கடோறும், அவ்வக்குரு பூஜாராதனங்களை நியமமாகச் செய்துவருகின்றவர்களாகியும், இன்னுந்தங்கள் சாதிமேன்மைக்குரிய நல்லொழுக்கங்களெல்லாம் மேற்கொண்டவர்களாகியும் உள்ள உத்தம சிவபத்திமான்களாகிய பிராமணர்கள் அநேகரிருக்கின்றார்கள். அவர்களுடைய ஸ்ரீபாதங்களைச் சிரமேற்கொண்டு வாழ்வதே நமது கடமையென்க. அவர்கள் செய்கையை நேரேதெரிந்த பின்னாவது மற்றைப் பிராமணர்கள், சிவப்பிராமண சிவாகமாதி நிந்தனை முழுதும் நீங்கி இவர்கள் மேற்கொண்ட உண்மை நெறி கைப்பற்றி வாழ்வார்களாக.

இனிச் சிவப்பிராமணர்களிற் சிலர், தங்களுக்கு நான்குபடி கீழுள்ள பிராமணர்களை உபாத்தியாயர்களாகக் கொண்டு, சிராத்தாதி சில கிரியைகளைச் செய்வது விதிவிரோதமெனத்தெளிந்து, தாங்கள் எல்லோரும் வேதசிவாகமாதி நூல்களை நன்குணர்ந்து, தாங்களே செய்துகொள்ளாமற் பராமுகர்களாயிருப்பது என்ன தலைவிதியோ? இது அறியாமைக்குணமன்றி வேறில்லை. இதுவன்றிச், சில சிவாலயங்களிலும் அவர்களைக்கொண்டு புண்ணியாகவாசன பஞ்சகவ்விய வாஸ்து சாந்தியாதி செய்கின்றார்கள். சிவாகம உணர்ச்சியில்லாத அப்பிராமணர்கள் அக்கிரியைகளைச் சிவாகம விதிப்படி செய்வார்களா? அவர்கள் சிவாலயத்தில் அத்தியயன மாத்திரையே அன்றி எவ்விதக்கிரியையாவது செய்யலாமா? செய்யும்படி சிவாகமம் விதித்ததுண்டா? எந்தக்காரணத்தினாலாவது செய்தால் தேசத்துக்கும் ராஜனுக்கும் தீங்கு விளையுமென்று சிவாகமங்கள் கூறுகின்றனவே. சிவாகமவிதிப்படியல்லவா சிவாலயக் கிரியைகள் நடக்கவேண்டும். இவைகளெல்லாம் அதிபதிகள் சீர்தூக்கிச் சிவப்பிராமணர்களெல்லோரும் வேதசிவாகமாதி சிவசாஸ்திரபோத சீலர்களாய்ச் சிரத்தையுடன் சிவாலய பூஜாதிகள் செய்துவரும்படியும் அதற்குவேண்டிய ஏற்பாடுகள்செய்து நடத்திவரும்படியும் ஸ்ரீகணேச ஸ்கந்தசகித ஸ்ரீ சாம்பபரமேசுர சரணாரவிந்தங்களைப் பணிந்து பிரார்த்திக்கின்றேன்.

ஆதிசைவகுலமான்மியம் முற்றிற்று.

---

## ஓர் வேண்டுகோள்.

சைவாபிமான சீலர்கள் பலர் ஆங்காங்கு நடக்கும் சிவாலய உற்சவாதிகள், சிவாலய நிலைமைகள், சிவாபராதங்கள், சிவகைங்கரியங்கள், ஆலயப் பிரதிட்டைகள், சைவசபைகளின் இயக்கங்கள், சைவ நூல்களைப்பற்றிய அபிப்பிராயங்கள், சமயசம்பந்தமான வாதங்கள், சந்தேகங்கள் முதலிய பலவிஷயங்களை இப்பத்திரிகையில் வெளியிடுமாறு எமக்கு எழுதியனுப்புகிறார்கள். இவர்கள் எழுதி யனுப்புவனவற்றையெல்லாம் பக்ஷபாதமின்றி வெளியிட்டுவந்திருந்தால், இவைகளைத்தவிர வேறுவிஷயங்களைப் பிரசுரிக்க இடமிராது. சிலர் இரண்டொருவரியில் எழுதாமல் மிகவிரிவாகவும் எழுதுகிறார்கள். ஆதலால் பட்சபாதம் என்னும் குற்றத்திற்கு ஆளாதற்குப்பயந்தே இவைகளை நாம் இப்பத்திரிகையில் வெளியிடத்துணிவதில்லை. இதனால் எம்மிடத்தில் சிலருக்கு மனவருத்தமும் தோன்றியிருக்கும். இவைகளை வெளியிட இயலாமைக்கு யாமும் வருந்துவதுண்டு. இவைகள் வர்த்தமானப் பத்திரிகைகளில் வெளியிடப்படவேண்டியவை. நமக்கெனச் சைவ வர்த்தமானப்பத்திரிகை யொன்று இருக்குமானால் இவைகளையெல்லாம் தாராளமாய் வெளியிடலாம். அதனால் நம்து சைவசமய வளர்ச்சியும் உண்டாம். வர்த்தமானப் பத்திரிகையின்றி எந்த ஜனசமூகமும் அபிவிருத்தியடையாது. இக்காலத்தில் வர்த்தமானப்பத்திரிகை வெளியிடாத ஜனசமூகம் ஒரு நாகரிகமுள்ள ஜனசமூகமாகாது. ஆதலால் சைவப்பிரசாரகர்களும் சைவப்பிரபுக்களும் கூடி நமக்கென ஒருவர்த்தமானப் பத்திரிகையும் இல்லாக் குறைவைச் சிந்தித்து, விரைவில் ஒன்று வெளியிடத்தொடங்குமாறு வேண்டுகின்றோம்.

---

## சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு.

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம் இன்னாருக்கே சொந்தமென்பதொன்றில்லாமல் சைவசமயிகள் எல்லோருக்குமே உரியது. இச்சபையினர் சிறிதும் சுயநலம் பாராட்டாது பொதுநலத்தின் பொருட்டு உழைத்துவருவதுமன்றி மாதசந்தாவாகவும் நன்கொடைகளாகவும் பொருளுதவிசெய்து இப்பத்திரிகையை நடத்துகிறார்கள். இல்லாவிடில் வருடாந்தச்சந்தாவாலும் ஆயுள்சந்தாவாலுமே இப்பத்திரிகை நடைபெறமாட்டாது. இதனைச் சந்தாதாரர்களியாவரும் சீர்தூக்கி வி. பி. யில் அனுப்பும்போகும் அடுத்த ஜன

வரிமீ பத்திரிகையைத் திருப்பாமல் பெற்றுக்கொள்ளுமாறு பிரார்த்திக்கின்றோம்.

இவ்விஷயமாகச் சென்ற நவம்பர்மீ பத்திரிகையில் வெளியிட்டிருப்பதையும் அன்பர்கள் கவனிக்கவேண்டுகின்றோம்.

இப்போது உலகமுழுவதும் பலவழிகளில் மாறுதலடைந்து வருகிறது. அரசாங்கங்களே மாறுதலடைகின்றன. ஆட்கள்கூலி வாடகை, முதலியன ஒவ்வொன்றும் அதிகரித்துவருகிறது. ஆதலால் சைவாபிமான மேலீட்டினால் மிகவும் குறைத்துவைத்த ஆயுள் சந்தாவும் உயர நேரிட்டது. இதை ஆயுள் சந்தாதாரர்கள் அன்பு கூர்ந்து அங்கீகரிக்கப் பிரார்த்திக்கின்றோம்.

---

## சைவ சித்தாந்த மகா சமாஜம்.

இச்சமாஜத்தார் வருடந்தோறும் தங்கள் வருடாந்தக் கூட்டம் கூட்டுவற்குப் படும்பாட்டை நோக்க மிகவும் வருத்தமுண்டாகிறது. பலமுறைகளில் வருடம் பிறந்து பத்துமாதம் வரையில் இன்னவிடத்தில் அக்கூட்டம் கூடுமென்பதே தெரியவில்லை. யோசிக்கும்போது இவர்கள் கூடும் வருடாந்தக்கூட்டத்தைத் தங்கள் ஊரிற் கூட்டுவிக்க விரும்புவார் கிடைப்பது அரிதாயிருத்தலே இதற்குக் காரணமென்பது புலப்படுகின்றது. இப்போது எங்கும் சைவசபைகள் தோன்றி தத்தம் சொந்தமுயற்சியால் ஆண்டுநிறைவு விழாக்கள் கொண்டாடுகின்றன. இச்சமாஜமோவெனில் தன் ஆண்டு நிறைவுவிழாவைத் தன்னை வருவிக்கும் ஊரவர் முயற்சியாலும் செலவினாலும் நிறைவேற்றிக்கொள்வதாயிருக்கிறது. இதை வருவிக்கும் ஊரவர் இதற்கென அலங்காரப் பந்தரிட்டு விருந்தூட்டி யுபசரிப்பது மாத்திரம் போதாமல், இதின் அறிக்கைப்பத்திரம் முதலிய பத்திரங்களைத் தங்கள் செலவிலேயே அச்சிடவேண்டியும் இவர்கள் அழைத்துச்செல்லும் உபந்நியாசகர்முதலியவர்களுக்கு (இவர்கள் காரியதரிசி முதலிய நிர்வாக சபையினராயிருப்பினும்) பிரயாணச் செலவு கொடுக்கும்படியாகவும் இருக்கிறது. அன்றியும், அவ்வவ்வூர்ச் சபைகள் கொண்டாடும் ஆண்டு நிறைவு விழாக்களைக் காட்டிலும், சமாஜ ஆண்டு நிறைவுவிழாவில் யாதொரு விசேடமும் காணப்படவில்லை. ஆதலால் வெளியூரார் சமாஜத்தை யழைக்கும் ஆவலில்லாதவராதல் இயற்கையே. ஆதலால் இனியாவது மகாசமாஜமானது தன்பெயருக்கேற்ப மற்றச் சபைகளைக்காட்டிலும் விசேட

மானவைகளைச் செய்தல்வேண்டும். வருடத்திற்கொருமுறை ஒரு கூட்டம் கூட்டி, எதிர்கொளல், வந்தனோபசாரப்பத்திரம், வரவேற்புப்பத்திரம் முதலிய பத்திரங்களை வாசித்தல்; முன்னுரை நடுவுரை முடிவுரை அவையடக்கம் முதலியவைகளாற் சபையை யலங்கரித்து நாடகசாலையைப்போற் கலைந்துபோவதனால் யாதொருபயனுமுண்டாகாது. இப்படியே சமாஜம் பல வருடங்களைக்கழித்தது. இனிமேலும் இப்படியே காலங்கழிக்குமாயின் இச்சமாஜம் இருப்பதும் இல்லாமையும் ஒன்றேயாம். ஆதலால் இனி மகா சமாஜம் செய்யவேண்டிய காரியங்களாவன :—

1. சைவ சமயிகளுக்கு முதல்நூல்களாயிருப்பன வேதமும் சிவாகமுமாம். இவற்றுள் வேதமானது இப்பரதகண்டத்தில் வழங்கிவரும் வங்காளம் முதலிய பலபாஷைகளில் மாத்திரமன்றி, ஐரோப்பாகண்டத்திலுள்ள ஆங்கிலம் முதலிய பாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டிருக்க, நம்முடைய தமிழ்ப்பாஷையில் மொழிபெயர்க்கப்படாமலிருப்பது மிகப் பெருங்குறைவாம். ஆகமங்களும் பிறபாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. இவற்றுள் இரண்டொன்றே தமிழில் வெளிவந்து அதிகவிலைக்கு விற்கப்படுகிறது. ஏனையவை இருக்குமிடமும் தெரியவில்லை. இவைகளையும் மகாசமாஜம் தமிழில் மொழிபெயர்த்து அச்சிடவேண்டும். இதுவே முதலிற் செய்யப்படவேண்டியது. இதனைச் செய்யாமல் வேதத்தில் அப்படிச் சொல்லுகிறது ஆகமத்தில் இப்படிச் சொல்லுகிறது என்று வேதாகமங்களைக் கண்ணினாலும் பார்த்தறியாதவர்கள் உபந்நியசித்தல் பரிகாசத்திற்கிடமாம்.

2. இப்போது நமது தமிழ்நாட்டில் எங்கும் சைவப்பிரசங்கங்கள் நடக்கின்றன. சென்னை முதலிய இடங்களில் கருமாந்தர வீடுகளிலும் கடைவீதிகளிலுங்கூட சைவப்பிரசங்கங்கள் நடக்கின்றன. இப்பிரசங்கங்கள் நடக்குந் தமிழ்நாட்டிலேயே சமாஜத்தாரும் பிரசங்கிப்பது மிகையாம். இப்பரதகண்டத்துள் தமிழ்நாடல்லாத பிறநாடுகளிலும் சிவபத்திசெய்வார் நிரம்பி இருக்கிறார்கள். இவர்களுக்கு நமது சமயாசாரியர், சந்தானசாரியர் முதலியவர்களின் சரித்திரங்களும், சைவசித்தாந்தமும் தெரியாது. இவர்களும் இவைகளை யறியுமாறு அவ்வத்தேசங்களில் அவ்வப்பாஷைகளில் பிரசங்கம் செய்தல்வேண்டும். சைவநூல்களை அப்பாஷைகளில் மொழிபெயர்த்து அச்சிடுதல்வேண்டும்.

3. ஜனங்கள் சமயக்கல்வியைக் கற்று சமயாநுட்டானங்களை யநுட்டிக்குமாறு செய்தலே சமயபரிபாலனமாம். இதைச்செய்யாதபோது மற்றவையெல்லாம் வெறும் ஆரவாரமாய் அவலமாய் விடும். சைவசமயிகள் பாடசாலைகள் மூலமாகச் சிறுவயதினிருந்தே தங்கள் பிள்ளைகளுக்குச் சமயபோதனை செய்யாமையால், சைவாநுட்டானங்கள் குன்றி, இப்போது உண்மைச்சைவம் உலகத்திலில்லை யென்று சொல்லும்படியான நிலைமை உண்டாய்விட்டது. ஆதலால் சமாஜத்தார் பிரதமபாடசாலைகளும், உயர்தரப் பாடசாலைகளும் வைத்து சிறுவர்களுக்கு அதின்மூலமாய்ச் சைவ சமய போதனைசெய்து, சைவ ஒழுக்கங்களைக் கடைப்பிடிக்குமாறு செய்தல்வேண்டும்.

4. இப்போது சைவசமயத்திற் பிறந்தோருள்ளும் ஆயிரத்துள் ஒருவரேனும் சமயதீக்கையேனும் பெற்றிருத்தலைக் காண்பது அரிதா யிருக்கிறது. ஆதலால் சமாஜத்தார் ஜனங்கள் கல்வியறிவு ஒழுக்கங்களை யுடையவர்களைக்கொண்டு தீக்கை செய்துகொள்வதற்குவேண்டிய வசதிகளைச்செய்தல்வேண்டும். சமாஜத்தின் காரிய நிர்வாகிகளும் தங்கள் ஒழுக்கத்தைப்பிறரும் பின்பற்றுமாறு சமய விசேட முதலிய தீக்ஷைகளைப் பெற்று, சமயாநுட்டானங்களை விதிப்படி யநுட்டிப்பவர்களாயிருத்தல் வேண்டும்.

5. சமாஜத்தார் தங்கள் செலவிலேயே அறிக்கைப்பத்திரம் அச்சிட்டுக்கொள்ளுதலும், உபந்நியாசகர்களுக்குப் பிரயாணச்செலவு கொடுத்தலும் வேண்டும். குருட்டுப்பாடக்காரர்களையும், எடுத்த விஷயத்தைப் பேசாமல் அக்கிராசனரைப் புகழ்வதிலும், அவையடக்கம்சொல்வதிலும், மற்றொன்றுவிரித்தலிலும் காலங்கழிப்போரையும், உண்மைச் சைவாபிமானமும் ஒழுக்கமுமில்லாத வேடதாரிகளையும் பிரசங்கமேடையில் சேர்க்கலாகாது. கூடியவரையில் கற்றவர்களையும் ஒழுக்கமுடையவர்களையும் கொண்டு எதையும் வைதிகமாய்ச் செய்தல்வேண்டும்.

6. சைவ சமயத்தின் தற்கால நிலைமையையும், சைவ சமய பரிபாலனம் செய்தற்குரிய வழிகளையும், சிவாலயங்களிலும் மடங்களிலும் காணப்படும் குறைகளையும் பத்திரிகைவாயிலாகவும் உபந்நியாசங்கள் மூலமாகவும் ஜனங்களுக்கு நன்குவிளக்கி, வருடந்தோறும் இன்னின்ன சீர்திருத்தங்கள் செய்யப்படுதல் வேண்டுமென்று மகா ஜனக்கூட்டங்களில் தீர்மானங்கள் செய்யப்படல்வேண்டும்.

7. சமாஜ அறிக்கைப்பத்திரமானது வெற்றுரைகளால் நிரப்பப்படாமல், சமாஜமானது வருடத்திற்குவருடம் அதிகமாக எவ்வெவ்வழிகளில் சமயபரிபாலனம் செய்து வருகின்றதென்பதை விளக்குவதாயிருத்தல் வேண்டும்.

இவைபோல்வன இன்னும் பலவுள. அவைகள் இராமநாதபுரத்தில், 1910ஞு டிசம்பர்மாதம் கூடிய இந்த மகா சமாஜத்தின் ஐந்தாவது வருடாந்தக் கூட்டத்தில் அச்சிட்டு அரங்கேற்றிய சைவ சமயிகளின் கடமை என்னும் நூலில் நன்குவிளக்கப்பட்டுள்ளன.

இத்தகைய காரியங்களைச்செய்ய நமது மகாசமாஜம் முற்பட வேண்டும். இவைகளைச்செய்வதற்குப் பொருள் எங்கேயிருக்கிறதென்று சிலர் கேட்கலாம். உண்மையும் உழைப்பும் இருந்தால் இவைகளைத் திருவருள் கூட்டுவிக்கும். "முயற்சி திருவினையாக்கும் முயற்றின்மை—யின்மை புகுத்திவிடும்."—"மடியுளாண் மாமுகடியென்ப மடியிலான்—றாளுளா டாமரையினுள்" என்னும் திருவள்ளுவநாயனார் திருவாக்கும், "உழைப்பின் வாரா வுறுதிகளுளவோ, கழப்பின் வாராக் கையறவுளவோ" என்னும் பட்டினத்தடிகள் திருவாக்கும் என்றும் பொய்ப்படுதலில்லை.

---

## அர்ச்சாதீபம்.

(260-வது பக்கத்தொடர்ச்சி.)

அன்றியும், அந்த வசனங்களில் (அதை நாமறியோம். அதைத் தெரிவிக்கும் வழியும் நமக்குத் தெரியாது. அது தெரிந்ததற்கு வேறாயும், தெரியாததற்குப் புறம்பாயும் இருக்கிறது என்று முன்னோருரைக்கக் கேட்டோம்) என்ற வுரைகளையும் நம்மவர் எழுதி ஆளுகின்றார்கள். நாமறியோம் என்று முன்னோரே உரைக்கையில், நம்மவர் அதை எப்படி அறியக்கூடும்? அதைத் தெரிவிக்கும் வழி முன்னோருக்கே தெரியாதபோது நம்மவர் பிறருக்கு எப்படி தெரிவிக்கக்கூடும்? நம்மவர் எதைத் தெரிந்ததாகக் கருதுவாரோ, அதற்கு அந்தப் பிரஹ்மம் வேறாய் விடுமெனின், அவர் அதை தெரிந்தவராதல் எங்ஙனம்? நம்மவருக்கு எது தெரியாதோ, அதற்கு அந்தப் பிரஹ்மம் புறம்பாகுமெனின், அது அவருக்கு விஷயமாவது எப்படி? அறியமுடியாது, அறிவிக்க முடியாது, தெரிந்ததற்கு வேறு, தெரியாததற்குப் புறம்பு என்ற சித்தாந்தங்கள் ஒன்றோடொன்று முரணுதலால், அவற்றை ஸமந்வயப்படுத்திக் காட்

டாது வீணே ஆள்வதில் என்னபயன்? இனி அவற்றி னுண்மையை ஈண்டு யாம் பொருத்திக் காட்டுகின்றோம். (நாமறியோம்) என்றது ஆத்மா தானே அறியமாட்டாதென்பதையும், (நமக்குத் தெரிவிக்கும் வழியுந் தெரியாது) என்றது ஆத்மாவுக்குச் சிவமே தெரிவிக்கத்தக்கதென்பதையும், (தெரிந்ததற்கு வேறாயும்) என்றது சுட்டறிவுக்கு எட்டாதென்பதையும், (தெரியாததற்குப் புறம்பாயும்) என்றது ஸமாதியில் அநுபவிக்கத்தக்க தென்பதையும் வெளியாக்கின. இப்படி யறிவதொழிந்து அந்த வாக்கியங்களுக்கு ஒன்றோடொன்று முரணுண்டாகப் பொருள் கூறுவது அறியாமையாக முடியும். அப்படியே ரூபமற்றது - ரூபமுள்ளது என்றவிடத்துங் கோணுதலின்றிப் பொருள் கூறவேண்டும். ரூபமற்றது என்றவிடத்தில் முன்பின் யோசியாமல் தப்பர்த்தங் கூறுவது கூடாது. பிரஹ்மம் ரூபமுள்ளது, அதைப் பிம்பங்களிற் பாவித்துப் பூசிக்கலாம் என்ற வுண்மைகளை இடம்வந்துழி விரிப்பாம்.

ச - வது காட்டிய வசனத்தில் (அதிரிசிய-அநாத்ம) சப்தங்கள் வந்தமையும் எம்மைப் பாதிக்கமாட்டா. முதல் வசனம் மூன்றாவது வசனங்களிற்போந்த ஸமாதானமே ஈண்டும் பொருந்தும்.

(இன்னும் வரும்.)

---

## வாழ்த்தும் வந்தனமும்.

நமது அருமைச் சைவச் செல்வி இவ்வருடத்திலும், முன் வருடங்களுக்கொப்பாகவே, காகிதப்பஞ்சம் முதலிய பற்பல இடையூறுகளாலும் சிறிதும் வாடுதலின்றி, வளர்பிறைபோல் வளர்ந்து, பலதேயங்களிலும் தவழ்ந்துசென்று, ஆங்காங்குள்ள சைவாபிமான சீலர்களாகிய தன் செவிலித்தாய்மார்களின் கரகமலங்களிற்றங்கி, சிவானந்தாமிர்தம் உண்பித்துவந்தனள். இவளை யன்போடு ஆதரித்து வளர்த்துவரும் அவ்வன்பர்களுக்கு நாம் மனமார வந்தனமளித்து, அவர்களும் இச்சைவ மதத்தையும், இப்படியே நாளுக்குநாள் பல்வளனுமோங்கி வாழுமாறு ஸ்ரீ நடராஜப்பெருமானார் திருவடிகளைத் தியானிக்கின்றோம். சுபம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீய தெல்லா மரனாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்.